## SUBORDINATE COURT, UTHANGARAI

| | | |
|---|---|---|
| **Original Suit No.** | : | **MCOP.No. 69 /2021** |
| **Deposition of witness for** | : | **Respondent** |
| **Serial No. of Witness** | : | **RW.1** |
| **Name** | : | **திருமதி. நிஷா** |
| **Father/Husband Name** | : | **திரு. சிலம்பரசன்** |
| **Village** | : | **தருமபுரி** |
| **Taluk** | : | **தருமபுரி** |
| **Age** | : | **30** |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 03th July - 2025** | | |

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலரின் அங்கீகார கடிதத்தின் படி சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி அங்கீகார கடிதம் மூ.சா.ஆ.1 ஆகும். போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு உட்பட்ட குற்ற எண் 28/21 விபத்தில் சம்பந்தப்பட்ட TN-29 BM 22 77 என்ற வாகனத்தினை எங்கள் அலுவலகத்தில் ஆய்வு செய்தார்கள் அதற்கான ஆய்வு அறிக்கை தாக்கல் செய்கிறேன். அது மூ.சா. ஆ.2 ஆகும். மேற்படி வாகனத்திற்கு 08.04.2021 தேதி வரை அவ்வாகன அனுமதி உள்ளது ஆனால் அது சம்மந்தமான கோப்பு எங்கள் அலுவலகத்தில் இல்லை. மேற்படி வாகனம் தருமபுரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அங்கு தான் இருக்கும். மேற்படி வாகன்த்தின் ஓட்டுனர் முனிராஜ்க்கு மேற்படி வாகனத்தை ஓட்ட உரிமம் உள்ளது.

குறுக்கு விசாரணை

எங்கள் அலுவலகத்தில் மேற்படி வாகனத்தை ஆய்வு செய்யும் போது வாகனத்திற்கான அனுமதி சான்று இருந்தது என்றால் சரிதான். அதேபோல்

பேருந்து ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் பேருந்தை ஓட்ட ஓட்டுனர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். நாங்கள் ஆய்வு அறிக்கை தயார் செய்யும்போது மேற்படி ஆவணங்களை பரிசீலித்து அதன் பெயரில் தான் தயார் செய்தோம் என்றால் வாகன ஆய்வாளர் அவ்வாறு தான் தயார் செய்வார்.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.